நீங்கள் சொல்லக்கூடிய திட்டங்களும் இணைக்கப்பட்டிருக்கின்றன. அத்தகைய பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 58, மாண்புமிகு உறுப்பினர் திரு. எச். அப்துல் பாசித், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

58—

மராமத்து

***51163—திரு. எச். அப்துல் பாசித்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வாணியம்பாடி தொகுதி, வாணியம்பாடி பெருமாள் கோயிலை மராமத்து செய்ய அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வேலூர் மாவட்டம், வாணியம்பாடி நகர், அருள்மிகு பெருமாள் திருக்கோயில், இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயிலாகும். இந்தத் திருக்கோயில் முழுமையாக திருப்பணி செய்திட வேண்டிய நிலையில் உள்ளது. இதற்கு உத்தேசமாக ரூ.60 இலட்சம் தேவைப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இப்பணிகளை செய்திட திருக்கோயிலில் போதிய நிதி வசதி இல்லை. முழு மதிப்பீட்டுத் தொகையும் அரசு நிதியில் வழங்கிட வழிவகையும் இல்லை. ஆகவே, இத்திருக்கோயிலின் திருப்பணியில் பொது மக்கள் தங்களை ஆர்வத்துடன் ஈடுபடுத்தி பங்களிப்பு அளிக்க முன்வரும் நிலையில், பொது மக்களை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் மதிப்பீட்டுத் தொகையில் 25 சதவிகிதத்திற்கு மிகாது இந்து சமய அறநிலையத் துறையின்மூலம் நிதி உதவி வழங்கிப் பணிகள் செய்திட நடவடிக்கை எடுக்கப்படும்.

முற்பகல் 10-25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எச். அப்துல் பாசித்.

2009 பிப்ரவரி 24]

திரு. எச். அப்துல் பாசித்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அழகு பெருமாள் கோயில் மதுராந்தக சோழ மன்னர்களால் கட்டப்பட்டது. கி.பி. 965 ஆம் ஆண்டு சோழ ராஜாவால் கட்டப்பட்ட அந்தக் கோயிலுக்கு இராஜ கோபுரம் இல்லாமல் இருக்கிறது. அதேபோல, இலட்சுமிநாராயண பெருமாள் சன்னதி மற்றும் இதர பெருமாள் சன்னதிகளில் உள்ள கோபுரங்கள் பழுதடைந்துள்ளன. நிதிநிலையை எடுத்துரைத்து, மக்களுடைய பங்கு என்ன என்பதற்கு அமைச்சர் அவர்கள் விளக்கமளித்தார்கள். ஆனால், இந்தக் கோயிலுக்கு எதிரே நாகூராருடைய குருநாதர் மஸ்தான் நௌலியா அவர்களுடைய அடக்க ஸ்தலமும் இருக்கிறது. எனவே, இந்தக் கோயில் மற்ற கோயில்களைப்போல சாதாரண கோயில் அல்ல. மத நல்லிணக்கத்திற்கு எடுத்துக்காட்டாகவும், சகோதரத்துவத்தின் அடையாளமாகவும் திகழ்கின்ற இந்தக் கோயில் கோபுரங்களின் பழுதை உடனடியாக நீக்கி, அப்பகுதி மக்கள் மேன்மேலும் சகோதரத்துவத்துடன் வாழ ஒத்துழைக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே குறிப்பிட்டதைப்போல, திருக்கோயிலில் முழுமையான அளவிற்கு திருப்பணி செய்ய வேண்டிய அவசியம் உள்ளது. ஆனால், அதே நேரத்தில் நிதிநிலையைத்தான் இங்கே கருத்தில்கொள்ள வேண்டியதாக இருக்கிறது. இந்துக்கள் மட்டும்தான் நிதியுதவிகளைச் செய்வதற்கு, திருப்பணிகளைச் செய்வதற்கு, உதவ வேண்டும் என்பதில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சமூக நல்லிணக்கத்திற்கு எடுத்துக்காட்டான கேள்வியைக் கேட்டு, தன்னுடைய ஆர்வத்தை வெளிப்படுத்தியிருக்கிறார். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தன்னுடைய முயற்சியிலோ அல்லது அருகிலே இருக்கக்கூடிய இஸ்லாமியர்களுடைய திருத்தலத்திலிருந்து தொகையினைக் கொடுப்பதற்குக்கூட முயற்சிகளை மேற்கொண்டால், அவருடைய முயற்சி வெறும் கேள்வி என்ற அளவிலே இல்லாமல் திருப்பணி செய்வதற்கும் உறுதுணையாக இருக்கும். ஆகவே, அந்தக் காலத்தில் நவாப்கள் இந்துக்களுடைய கோயில்களைக் கட்டுவதற்கும், திருப்பணியைச் செய்வதற்கும் மட்டுமல்லாமல், அந்தக் கோயில்களில் அன்றாட பூஜை போன்றவற்றுக்கு நிரந்தர வருவாய்களுக்கும் வழிவகைகளைச் செய்திருக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர்

[2009 பிப்ரவரி 24

திரு. அப்துல் பாசித் அவர்கள் கடந்த கால நவாப்களைப்போல அந்தப் பட்டியலில் தன்னையும் இணைத்துக்கொண்டால், வரலாற்றில் அவர் நல்லதொரு இடத்தைப் பிடிப்பார். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுதர்சனம். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. எச். அப்துல் பாசித்.

திரு. எச். அப்துல் பாசித்: திருப்பணிகளை முழுமையாக ஒரேநேரத்தில் செய்யவேண்டும் என்பது என்னுடைய கோரிக்கை அல்ல. நான் என் சார்பாக முடிந்த அளவிற்கு மக்களுடைய பங்களிப்புத் தொகையை வழங்குகிறேன். எனவே, இந்த வருட நிதியிலே அந்த இரண்டு கோபுரங்களைக் கட்டுவதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதைத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய அதி ஆர்வத்தைக் கருத்தில்கொண்டு, நானே நேரடியாகச் சென்று அந்தத் திருக்கோயிலைப் பார்வையிட்டு உரிய நடவடிக்கைகளை வெகு விரைவிலே எடுப்பேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுதர்சனம்.

திரு. டி. சுதர்சனம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெருமாள் கோயிலைக் கட்ட வேண்டுமென்ற எண்ணத்தில் அருமை நண்பர் திரு. அப்துல் பாசித் அவர்கள் தேசிய ஒருமைப்பாட்டைக் காக்கின்ற வகையிலே (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு கேள்வியினை இங்கே எழுப்பியிருக்கின்றார்கள். மத நல்லிணக்கத்தை அனைவரும் புரிந்துகொள்ள வேண்டுமென்ற நல்லெண்ணத்தின் அடிப்படையிலே அவர்கள் இங்கே கேள்வியை எழுப்பியிருக்கின்றார்கள். இந்த அரசு தமிழகத்திலே ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பின்னாலே, பல்வேறு இடங்களில் திருப்பணி வேகமாக நடந்து வருகிறது. ஆனால், சில

2009 பிப்ரவரி 24]

இடங்களிலே இரண்டு ஆண்டுகள் ஆகியும் திருப்பணி கமிட்டிகளை அமைக்காத காரணத்தினால், அமைச்சர் வேகமாக இருந்தாலும், அதிகாரிகள் வேகமாக இல்லாத காரணத்தினால், இந்தக் கோயில் திருப்பணிகள், எல்லாம் மிகக் குறைவாகவே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதை வேகப்படுத்துவதற்கு அமைச்சர் ஆவன செய்வாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காங்கிரஸ் கட்சியினுடைய மாண்புமிகு சட்டமன்றக் கட்சித் தலைவர் அவர்கள் இந்தத் துறைக்கு ஏராளமான உதவிகளைச் செய்துகொண்டிருக்கின்றார்கள். குறிப்பாக அவர்களே பல திருக்கோயில்களுடைய திருப்பணிகளுக்கும், திருக்குளங்களினுடைய திருப்பணிகளுக்கெல்லாம் முன்னின்று உதவிகளைச் செய்திருக்கின்றார்கள். மாண்புமிகு காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் அவர்கள் குறிப்பிட்டுச் சொன்ன அந்தத் திருப்பணிக் குழுக்களை விரைந்து அமைப்பதற்கு பொதுவாக அங்கேயிருக்கக்கூடிய . . .

முற்பகல் 10-30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்: பல்வேறு தரப்பினரையும் ஒருங்கிணைக்க வேண்டும். ஒரு திருப்பணிக் குழுவை அமைப்பது என்பது, ஏதோ இங்கேயிருக்கக்கூடிய அமைச்சரோ, அதிகாரிகளோ உடனடியாக நியமித்துவிட முடியாது. அந்தத் திருக்கோயிலுக்குச் சம்பந்தப்பட்ட பல தரப்பினரையும் ஒருங்கிணைத்து, அந்தக் குழுவினை அமைக்கவேண்டிய காரணத்தால், ஒருவேளை அதில் காலதாமதம் ஏற்பட்டிருக்கலாம். அப்படியிருப்பினும், அது களையப்படும்; வெகு விரைவிலே அந்தக் குழுக்கள் அமைக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 59, மாண்புமிகு உறுப்பினர் திரு. இல. வேலுசாமி, மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

TRUTH ALONE TRIUMPHS